வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 84 of 2017

வழக்கு சாட்சி - PW 6

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கதிர்வேல் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| தந்தை பெயர் | : | நாச்சிமுத்து | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 03.03.2026.

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**முதல் விசாரணை :**

1) நான் தற்போது ஈரோடு மாவட்டம் நக்ஷசல் சிறப்பு பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.02.2017 ஆம் தேதி அவிநாசிபாளையம் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அவிநாசிபாளையம் காவல் நிலைய தலைமைகாவலர் 1260 சி.ஆத்தியப்பன் அன்றைய தினம் 22.30 மணிக்கு நிலைய பொறுப்பு அலுவலில் அவிநாசிபாளையம் காவல் நிலைய குற்ற எண் 47/2017 பரிவுகள் 279,304(A)(2 Counts) இதச வழக்கினை மங்களம் காவல் நிலைய ஆய்வவாளர் புலன் விசாரணை செய்து தொடர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டதில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் சரியாக இருந்தது காவல் ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடம் கூறியதால் மறுவாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

2)பின்பு வழக்கில் எதிரி ஓட்டி வந்த டேங்கர் லாரி MH 46 H 1525 Ashok leyland லாரியின் ஆவணங்களை சரிபார்த்து மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள்

கடிதம் கொடுத்து அனுப்பினேன். வழக்கு கோப்பினை பார்வையிட்டதில் இருந்தும் சாட்சிகளை விசாரணை செய்ததில் இருந்தும் சம்பவம் உண்மையென தெரியவநத்தன் பேரில் எதிரியை கைது செய்ய நடவடிக்கை எடுத்த போது கடந்த 07.02.2017 ஆம் தேதி இவ்வழக்கின் எதிரி ஜூடு மஜிலா குற்றத்தை ஒப்புக்கொண்டு நிலையம் ஆஜரானவரை பகல் 01.00 மணிக்கு கைது செய்து எதிரியை அடைப்பு காவலில் அடைக்க வேண்டி எதிரியை தக்க வழி காவலுடன் பல்லடம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன்.

3)இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட டேங்கர் லாரியின் உரிமையாளர் ஜெயராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 13.02.2017 ஆம் தேதி இவ்வழக்கில் இறந்துபோனவர்கள் வந்த வாகனம் TN 37 CJ 4776 Honda city வாகனத்தின் ஆவணங்களை சரிபார்த்து மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். பின்பு 16.03.2017 ஆம் தேதி திருப்பூர் அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் இறந்துபோன சண்முகம் மற்றும் ஆனந்த் அவர்களின் AR மற்றும் டெத் இன்டிமேசனை பதிவு செய்த மருத்துவர் திருமதி.அருணா ராஜசீலா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ 7 மற்றும் 8** ஆகும்.

4)பின்பு வழக்கில் இற்நதுபோன சண்முகம் மற்றும் ஆனந்த் அவர்களின் பிரேதத்தினை உடற்கூறாய்வு செய்த மருத்துவர் திரு. கார்த்திகேயன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை சான்றுகள் பெற்றேன். அவை முறையே அ.த.சா.ஆ.9 மற்று.ம் 10 ஆகும். பின்பு திருப்பூர் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட MH 46 H 1525 என்ற வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் நடசேன் அவர்களை விசாரித்து மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அ ந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ .11** ஆகும். பின்பு வழக்கில் சம்மந்தப்பட்ட TN

37 CJ 4676 என்ற Honda city வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் பாஸ்கர் அவர்களை விசாரித்து மோட்டடார் வாகன ஆய்வறிக்கை பெற்றேன். அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கை **அ.த.சா.ஆ. 12** ஆகும். இ்துதுடன் எனது புலன் விசாரனை முடித்து 16.03.2017 ஆம் தேதி எதிரி மீது சட்டப்பிரிவு 279,304(A)(2 Counts) இதச வின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1)நான் எந்த தேதி அன்று வழக்கை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் 02.02.2017 ஆம் தேதி அன்று. எதிரியை கைது செய்வதற்கு முன்பே மோட்டார் வாகன ஆய்விற்கு வாகனத்தை அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான்.வழக்கின் புகார்தார்தான் வழக்கில் இறந்துபோன இரண்டு நபர்களை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தாக விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரர் இறந்துபோன இரண்டு நபர்களையும் திருப்பூர் அரசு மருத்துமனையில்சேர்த்துவிட்டு பின்பு காவல் நிலையம் வந்து புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார்தாரர் காவல் நிலையம் வந்து புகார் தருவதற்கு முன்பு வரை தகவல் தெரியாது என்றால் அந்த சமயத்தில் நான் விடுமுறையில் இருந்ததால் வேறுஒரு காவல் ஆய்வாளர் விசாரித்தார். விபத்து பதிவேட்டில் பிரேதங்களை திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்தவர் என்ற இடத்தில் கருப்புசாமி pc 775 என்ற பெயர் இருந்தது என்றால் சரிதான்.

2) இவ்வழக்கின் ஒரே கண்ணுற்ற சாட்சியான சேகர் என்பவர் விபத்தின்போதுஎந்த இருசக்கரத்தில் வந்ததார் என்ற விவரத்தை நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் இருசக்கர வாகனத்தில் வந்தேன் என்று கூறியுள்ளார். சம்பவ இடமான

அவிநாசிபாளையம் லோகநாதன் பெட்ரோல் பங்கில் எதிரி வாகனத்திற்கு யார் எரிபொருள் நிரப்பினார்கள் என்று விசாரித்து அவரை இந்த வழக்கில்சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

3)பெட்ரோல் பங்கில் உள்ள கண்காணிப்பு கேமராவின் பதிவு களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பதிவு களை தாக்கல் செய்தால் இவ்வழக்கிற்கு பாதகமாக மாறிவிடும் என்பதால் தான் தாக்கல் செய்யவில்லைஎன்றால் சரியல்ல. கண்ணுற்ற சாட்சி விபத்தானது நேருக்கு நேர் நடந்ததா அல்லது பக்கவாட்டில் நடந்ததா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் விபத்து நடந்ததாக கூறினார். இந்த வழக்கில் நான் சொன்ன விதத்தில் புகார்மனு பெறப்படவில்லை என்றும், வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்காவணங்கள் காவல்நிலையத்தில் வைத்து பின் ஆலோசனை செய்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்குக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறாக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.03.03 17:43:08 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.